# உலகப் புகழ்மிக்க ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் - சுயமரியாதையைக் காத்த தந்தை பெரியார் திருவுருவப் படத்தை திறந்து வைப்பதில் பெருமைப்படுகிறேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

லண்டன், செப். 6 -

உலகப் புகழ்மிக்க லண்டன் பல்கலைக்கழகத்தில், சுயமரியாதைத் தலைவர், தன்மானத் தலைவர் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்தை திறந்து வைப்பதில் பெருமைப்படுகிறேன். பூரிப்படைகிறேன் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இது தொடர்பாக இங்கிலாந்து நாட்டின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத் திறப்பு விழா குறித்து இலண்டனிலிருந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள வீடியோ சமூக



வலைதளப் பதிவு வருமாறு:-

தமிழர்களுக்கு என்னுடைய அன்பான வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.


இன்று வியாழக்கிழமை (4.9.2025) மாலை நடைபெறும் நிகழ்ச்சியில் உலகப் புகழ்மிக்க ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் நம்முடைய சுயமரியாதை தலைவர், தன்மானத் தலைவர் தந்தை பெரியார் அவர்களுடைய திருவுருவப் படத்தை திறந்து வைக்க இருக்கிறேன் என்ற செய்தி உங்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கும். அதை திறந்து வைத்து, பேசுவதை எண்ணி பெருமைப்படுகிறேன், பூரிப்படைகிறேன்.

ஏனென்றால் அவர் தமிழர் தலைவர் மட்டுமல்ல, தமிழ்நாட்டு தலைவர் மட்டுமல்ல, உலகெங்கும் உள்ள தன்மானத்தை காத்த தலைவராக, சுயமரியாதையை காத்த தலைவராக விளங்கி கொண்டு இருக்கக் கூடியவர்.

அவருடைய திருவுருவப் படத்தை திறந்து வைத்து பேச இருக்கிறேன் என்பதை உங்களுக்கெல்லாம் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

(ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் நடைபெறும் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத் திறப்பு விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உரை நேற்று (5.9.2025) இந்திய நேரப்படி காலை 7.30 மணியளவில் ஒளிபரப்பப்பட்டது).



---

### பணியின் போது கண்டெடுத்த தங்கச் சங்கிலியை ஒப்படைத்த

## தூய்மைப் பணியாளர் கிளாராவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

சென்னை, செப். 6 -

தூய்மைப் பணியாளர் சகோதரி கிளாரா அவர்களின் நேர்மையை பாராட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு

**தூய்மைப் பணியின்போது கண்டெடுத்த தங்கச் சங்கிலியை நேர்மையோடு காவல்துறையிடம் சகோதரி கிளாரா அவர்கள் ஒப்படைத்த செய்தியைப் பார்த்து நெகிழ்ந்தேன்.**

**எளியவர்கள் எப்போதும் நேர்மையின் பக்கம்தான் என்பதற்கு மற்றுமோர் எடுத்துக்காட்டாக மின்னிடும் தங்கை கிளாராவுக்கு எனது அன்பும் பாராட்டுகளும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

## துப்புரவுப் பணியாளர் கிளாராவுக்குப் பாராட்டு!

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வெகுமதி வழங்கி சிறப்பித்தார்!

சென்னை, செப். 6 -

தூய்மை பணியின் போது கண்டெடுத்த தங்கச் சங்கிலியை காவல் நிலையத்தில் ஒப்படைத்த துப்புரவு பணியாளர் திருமதி கிளாரா அவர்களுக்கு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் புத்தாடை மற்றும் வெகுமதி வழங்கி பாராட்டு தெரிவித்தார்.

சென்னை ராயபுரம், காசிமேடு பகுதியைச் சேர்ந்த பெயிண்டராக பணியாற்றி வரும் ராமச்சந்திரன் என்பவரின் மனைவி திருமதி கிளாரா (வயது 39) அவர்கள், திருவான்மியூர் பகுதி 180 வது வார்டில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வருகின்றார். இந்த தம்பதியினருக்கு செல்வி ரா.சூசை மேரி (வயது 18), செல்வி ரா.சுவாதி (வயது 13), செல்வி ரா.நிக்கிதாஸ்ரீ (வயது 10) என்ற 3 பெண் குழந்தைகள் உள்ளனர்.

துப்புரவு பணியாளர் திருமதி கிளாரா திருவான்மியூர் மருந்தீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான, மருந்தீஸ்வரர் திருமண மண்டபத்தில் தூய்மை பணியில் ஈடுபட்ட போது கீழே கிடந்த 1 பவுன் தங்கச் சங்கிலியை கண்டெடுத்து, நேற்று முன் தினம் காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்.

இந்த செய்தியை அறிந்து துப்புரவு பணியாளர் திருமதி கிளாரா அவர்களை குடும்பத்துடன் தனது முகாம் அலுவலகத்திற்கு அழைத்த தமிழ்நாடு துணை முதலமைச்சர் . உதயநிதி ஸ்டாலின் அவர்கள், துப்புரவு பணியாளர் திருமதி கிளாரா அவர்களின் நேர்மையை பாராட்டினார். மேலும் புத்தாடை யும், தி.மு.க இளைஞரணி அறக்கட்டளையின் சார்பில் வெகுமதியும் வழங்கி அவரது நேர்மையான பணிக்கு வாழ்த்துப் தெரிவித்தார்.

துப்புரவு பணியாளர் திருமதி கிளாரா அவர்களின் குடும்பத்தினருடன் உரையாடிய தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், லண்டனில் இருந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தன்னை அழைத்து, பாராட்டு தெரிவிக்குமாறு தொலைபேசியில் தெரிவித்தார் என்றும், தமிழ்நாடு திரும்பியதும், உங்களை நேரில்சந்திக்க ஆர்வமாக இருப்பதாகவும், கிளாரா குடு ம்பத்தினரிடம் தெரிவித்தார்.

---

## கழக முப்பெரும் விழா - துணை முதலமைச்சர் பிறந்தநாள் விழா!

### கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வி.கணேசன் அறிக்கை!

*கடலூர், செப். 6 -*

*கழக முப்பெரும் விழா, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் குறித்து கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் சி.வே கணேசன் அறிக்கை விடுத்துள்ளார் அவரது அறிக்கை கீழ் வருமாறு:*

*கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்கவும்,கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படியும், ஒன்றிய கழக நகர கழக , பேரூர் வார்டு மற்றும் கிளைக் கழகங்களில் 05.09.2025, 06.09.2025, 07.09.2025 ஆகிய நாட்களில் கழக கூட்டங்கள் நடத்தப்பட்டு பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது.*

*பொருள் :*

*1 கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் தமிழ்நாட்டில் 2 கோடி 54 லட்சம் உறுப்பினர்கள் கழகத்தில் இணைந்துள்ளனர்.*

*இதற்காக எங்களது கிளைக் கழகம் சார்பில் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*2 அந்தந்த ஊரில் சேர்க்கப்பட்டுள்ள புதிய உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தனித்தனியாக குறிப்பிடவும்.*

*3 வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில், எங்களது கிளைக் கழகம் சார்பில் அயராது உழைத்து, அதிக வாக்கு வித்தியாசம் பெற்று, கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை ஏழாவது முறையாக அரியணை ஏற்ற பாடுபடுவோம்.*

*4 வருகிற செப்டம்பர் 17ஆம் தேதி, கழக முப்பெரும் விழா கரூரில் நடைபெற உள்ளது. அதில் எங்களது கிளைக் கழக உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்வோம்.*

*5 வரும் நவம்பர் 27ஆம் தேதி, துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை, தங்களது கிளைக் கழகங்களில் சிறப்பாகக் கொண்டாட தீர்மானம் நிறைவேற்றப்பட்ட வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என மாவட்டக் கழக செயலாளர், அமைச்சர் சி.வி.கணேசன் அறிக்கை விடுத்துள்ளார்.*



---

### தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

## மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்

### தி.மு.க. மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. மகளிர் தொண்டர் அணியின் திருநெல்வேலி மத்திய மாவட்டம் - திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மேற்கு ஆகிய மாநகரங்களின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் மற்றும் கோவை வடக்கு மாவட்ட துணை அமைப்பாளர் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திருநெல்வேலி மத்திய மாவட்டம்**

**திருநெல்வேலி கிழக்கு மாநகரம்**

அமைப்பாளர் - மேரி 53/பி, 9வது தாமஸ் தெரு, பெருமாள்புரம், திருநெல்வேலி - 627007.

துணை அமைப்பாளர்கள் - 1) இந்திரா இ6-1, உலகம்மன் கோவில் தெரு, பாளையங்கோட்டை - 627002. 2) மாரியம்மாள் திருநெல்வேலி. 3) சின்னத்தாய் 3ஏ, காந்தி நகர் 5வது தெரு, பாளையங்கோட்டை - 627002. 4) டி. சகாய ஜீலியட் மேரி எம்.ஐ.ஜி. 1886, மகிழ்ச்சி நகர், பாளையங்கோட்டை - 627007. 5) சுப்புலெட்சுமி 2-1, திருஞான சம்பந்த நாயனார் தெரு, பாளையங்கோட்டை. 6) சித்ரா பௌர்ணமி 19, செந்தில் நகர், பாளையங்கோட்டை- 627002

**திருநெல்வேலி மேற்கு மாநகரம்**

அமைப்பாளர் - சீதாலெட்சுமி 3எச்1/2, புதுக்கிராமம் சுந்தர விநாயகர் கோவில் தெரு, பேட்டை - 627004.

துணை அமைப்பாளர்கள் - 1) சுப்புலெட்சுமி 40ஏ, தடிவீரன் கோவில் கீழத் தெரு, திருநெல்வேலி டவுன் - 627006. 2) ராஜேஸ்வரி 121, வினைதீர்த்த விநாயகர் கோவில் தெரு, பேட்டை, திருநெல்வேலி - 627004. 3) கோமதி 71-1, செக்கடி தெரு, பேட்டை, திருநெல்வேலி - 627004. 4) பிஸ்மி சகர்பானு எம்.ஜி.பி. 4வது வடக்கு தெரு, பேட்டை, திருநெல்வேலி - 627004.

**கோவை வடக்கு மாவட்டம்**

கோவை வடக்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட திருமதி லதா அவர்கள் மறைவெய்திய காரணத்தால், **திருமதி ஆர்.சுமதி** (காரமடை ரோடு, மேட்டுப்பாளையம், கோவை) அவர்கள், கோவை வடக்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 04-09-2025.

**நாமக்கல் ப.இராணி**
செயலாளர்
தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

---

### கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு

## மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### மாநிலச் செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!

*தஞ்சை, செப். 6 -*

*தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களை உள்ளடக்கிய கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நாளை (07.09.2025 - ஞாயிற்றுக்கிழமை) அன்று மாலை 4 மணியளவில் தஞ்சாவூர் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.*

*அதுபோது தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, தஞ்சை மத்திய மாவட்டம், திருவாரூர், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களுக்குட்பட்ட கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாவட்ட தலைவர், துணை தலைவர், அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*பொருள் :- நடைபெறவுள்ள முப்பெரும் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள் தொடர்பாக.*

*இவ்வாறு தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

---

### தி.மு.க. மகளிர் அணி

## மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

### தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி -மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. மகளிர்அணியின் திருநெல்வேலி மத்திய மாவட்டம் -திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மேற்கு ஆகிய மாநகரங்களின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திருநெல்வேலி மத்திய மாவட்டம்**

**திருநெல்வேலி கிழக்கு மாநகரம்**

அமைப்பாளர் - டி.எம். சௌந்திரம் 3/எப், கிருபாகரன் தெரு, மிலிட்டரி லைன், பாளையங்கோட்டை.

துணை அமைப்பாளர்கள் - 1) கதீஜா இக்லாம் பாசிலா 116, காஜா நாயகம் தெரு, மேலப்பாளையம். 2) காந்திமதி ஒச்சான்குளம், பெருமாள்புரம், திருநெல்வேலி. 3) ஜோஸ்வனிதா எஸ்.எப்.எல். 13, லக்கி காலனி, பெருமாள்புரம், திருநெல்வேலி. 4) எஸ். காளிஸ்வரி 3ஏ, காந்தி நகர் 5வது தெரு, சமாதானபுரம், பாளையங்கோட்டை.

**திருநெல்வேலி மேற்கு மாநகரம்**

அமைப்பாளர் - அனார்கலி 23/6/1, கல்லணை தெரு, திருநெல்வேலி டவுன் - 627006.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். பிந்து அந்தோணி ஆரோக்கியம் 6ஏ, ஜாமிஆ பள்ளி வாசல் தெரு திருநெல்வேலி டவுன் - 627006. 2) எஸ். ஹமிதா 23, ஆர்.பி. சன்னதி தெரு, பேட்டை, திருநெல்வேலி - 627004. 3) ஆர். கிருஷ்ணவேணி 43, சாலை தெரு, மேகலிங்கபுரம், திருநெல்வேலி - 627001. 4) கீதா 5டி, மாவடி குளத்தான்கரை, தச்சநல்லூர், திருநெல்வேலி - 627358.


"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 04-09-2025.

**ஜெ. ஹெலன்டேவிட்சன்,**
செயலாளர்
தி.மு.க. மகளிர்அணி

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**புலவர் க.முருகையன்**
**செப்டம்பர் 6 (1997)**



**இளமைப் பருவத்திலேயே தந்தை பெரியாரின் கொள்கையில் ஈர்க்கப்பட்டு திராவிடர் கழகத்தில் பணியாற்றி, பின்னர் கழகம் துவங்கியதும் தன்னை இணைந்துக்கொண்டு, ஆசிரியராக பணியாற்றிக் கொண்டே கழகப் பணியாற்றியவர்.**

**தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் நன்மதிப்பை பெற்றவர்.**

**தலைவர் கலைஞர் அவர்களுடன் கல்லக்குடி போராட்டத்தில் கலந்து கொண்டவர்.**

**1967இல் திருவையாறு சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, திறம்பட பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் நடத்திய அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.